DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

| | |
|---|---|
| Calendar | ..CC.156/2018 |
| Miscellaneous | .. |
| Preliminary | .. |
| Register | .. |
| Sessions | .. |

| | |
|---|---|
| | PW 1 |
| Deposition of Witness for | Prosecution |
| | Court |

Name : நடராஜன்

Father's Name : சின்னதம்பி

Village : திருவதிகை

Taluk : பண்ருட்டி

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 14.12.2021.

**முதல் விசாரணை :** நான் தற்போது திருவதிகையில் குட்டைத் தெருவில் வசித்து வருகிறேன். நான் மரவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 14.08.2018 அன்று மதியம் 03.30 மணிக்கு என்னுடைய பூர்வீக இடத்தில் பாத்ரூம் மற்றும் லெட்டின் கட்டி பூசு வேலை செய்துகொண்டிருந்தேன். திடீரென அன்று 03.30 மணிக்கு கிருஷ்ணமூர்த்தி என்பவர் சாரத்தை பிடித்து ஆட்டி எனது முதுகில் கத்தியால் குத்திவிட்டார். என் முதுகில் ரத்தம் வழிவரை பார்த்த எனது தம்பி மூர்த்தி சண்டை போடாதீர்கள் என மறித்தார். எனது தம்பி மூர்த்தியை இடது கையில் கத்தியால் வெட்டிவிட்டார். எனது தம்பி ஆறுமுகம் என்பவர் அதை பார்த்து ஓடிவந்தார். சண்டை வேண்டாம் என்று கூறினார். அதற்கு ஏழுமலை என்பவர் தடியை எடுத்து ஆறுமுகத்தை மண்டையில் அடித்து விட்டார். அதை பார்த்த எனது மகன் ஜெயகணேஷ் ஏன் சண்டை போட்டுக்கொள்கிறீர்கள் என சண்டையை மறித்தார். அவரை நான் வேலைக்கு செல்ல வேண்டும் என்று சொன்ன அவரை கேஸ் தான் போடுவேன் நாங்களே திருமணம் ஆகாமல்

**தான் இருக்கிறோம். எதிரிகள் நான்கு, ஐந்து தலைமுறையாக சண்டை உள்ளது என சொல்கிறார்கள். பூசு பூசும் இடத்தில் காலை வைத்தால் காலை வெட்டிவிடுவோம் என்று கத்தியையும், அறுவாமனையையும் காட்டி மிரட்டினார்கள். எனது மனைவி காஞ்சனா ரத்தத்தை பார்த்து ஓடிவரவே கிருஷ்ணமூர்த்தி, குப்புசாமி, ஏழுமலை ஆகியோர் கத்தியால் எனது மனைவியின் இடுப்பிலும், முதுகிலும் அடித்தார்கள். கூட்டம் கூடிவிட்டது. உடனே போலிசாரும் வந்தனர். எங்களை போலிசார் மருத்துவமனைக்கு போகச் சொன்னார். தேவிடியா மகனே, உன்னை நான் கொல்லாமல் விடமாட்டேன் என்று அசிங்கமாக திட்டினார்கள். போலிசார் சொன்னதன் பேரில் நான் மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் நான் மருத்துவமனையில் இருக்கும்போது என்னிடம் வந்து விசாரித்து என்னிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார்கள். வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அதசாஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை **:** நான் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். நான் என் முதல் விசாரணையில் தெரிவித்துள்ள விவரங்களைத் தான் போலிசார் விசாரணையிலும் தெரிவித்துள்ளேன். எதிரிகள் எனக்கு எதிராக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்து ஆஜராகியுள்ளேன். அந்த வழக்கில் எதிரிகள் என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்று நான் படித்து பார்க்கவில்லை. எங்களிடத்தில் நான்கு அடி இடம் அவர்களுக்கு இருப்பதாக தெரிவித்துள்ளார்கள் என்று தெரிந்து கொண்டேன். எதிரிகள் எனக்கு சித்தப்பா முறை பங்காளிகள் ஆவர். நான் என் வீடு கட்டி 30 வருடம் ஆகிறது. என் வீட்டிற்கு மேற்கே என்னுடைய பூர்வீக இடம் உள்ளது. அந்த சொத்து சம்மந்தமாகத்தான் உரிமையியல் வழக்கு நடந்து வருகிறது. அந்த சொத்து தெற்கு வடக்கில் 130 அடி ஆகும். கிழக்கு மேற்காக மொத்தம் 47 1/2 அடி ஆகும். மேற்படி சொத்தில் சாரம் பூசிய பொழுது தான் இவ்வழக்கு சம்பவம் நடந்ததாக நான் தெரிவித்துள்ளேன். நான் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு சம்பவத்தன்றே மாலை 06.00 மணியளவில் சென்றேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு மதியம் 03.45 மணிக்கு போலிசார் வந்தனர். போலிசார் சம்பவ இடத்தில் வந்து விசாரித்து புகாரை எழுதிக் கொண்டனர். மறுநாள் 15.08.2018 அன்று காலை 11.00 மணியளவில் போலிசார் எங்களை அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் மாலை வரை இருக்க வைத்துவிட்டனர். அப்பொழுது எதிரிகளும் அங்கு காவல் நிலையத்தில் இருந்தனர். அதன் பின்னிட்டு போலிசார் மீண்டும் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வது போன்று எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் உரிமையியல் வழக்கிற்கு எங்களிடம் ஆதாரம் எதுவும் இல்லாததால் எதிரிகளின் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளில் ஏழுமலை, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உடன் பிறந்தவர்கள். குப்புசாமி கிருஷ்ணமூர்த்தியின் பெரியப்பா மகன் ஆவார். எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் 6 தலைமுறையாக பகைமை இருந்து வருகிறது என்றால் சரிதான். அதன் காரணமாக நான் எதிரிகளின் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

Calendar ..CC.156/2018
Miscellaneous ..

Preliminary ..
Register ..
Sessions ..

Deposition of Witness for PW 2 Prosecution Court

Name : **மூர்த்தி**

Father's Name : **சின்னதம்பி**

Village : **திருவதிகை**

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 14.12.2021.

**முதல் விசாரணை :** நான் தற்போது திருவதிகையில் என் பூர்வீக இடத்தில் வசித்து வருகிறேன். நான் கோவில்களில் வர்ணம் பூசும் வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது அண்ணன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 14.08.2018 அன்று எங்களுடைய பூர்வீக இடத்தில் நாங்கள் சாரம் போட்டு அன்றையதினம் 03.30 மணியளவில் வேலை செய்து கொண்டிருந்தபோது லெட்டின், பாத்ரூம் கட்டும் கட்டுமான வேலை செய்துகொண்டிருந்தோம். 7 அடி உயரத்தில் சுவர் எழுப்பிக்கொண்டிருக்கும் போது கட்டுமான வேலை செய்ய சாரம் போட்டு இருந்தோம். அப்போது கிருஷ்ணமூர்த்தி என்பவர் அவருடைய தம்பிகள் மணி, ஏழுமலை, கிருஷ்ணமூர்த்தியின் பெரியப்பா மகன் குப்புசாமி ஆகியோர்கள் நாங்கள் வேலை செய்துகொண்டிருக்கும்போது அவர்கள் வந்து தேவிடியா பையா என்று அசிங்கமான வார்த்தைகளால் என்னுடைய இடத்தில் காலை வைத்தால் காலை வெட்டி விடுவோம் என்று மிரட்டி என்னுடைய அண்ணன் நடராஜனை கத்தியால் முதுகில் வெட்டினார். அறுவா மனையால் எனது அண்ணன் நடராஜனை கிருஷ்ணமூர்த்தி இடது கையில் வெட்டினார். நான் சண்டையை மறித்து விட்டேன். பேசிக்கொள்ளலாம் என்று தடுத்தேன். அப்போது குப்புசாமி எனது இடது

ஆள்காட்டி விரலை வெட்டிவிட்டார். அதன் பின்னிட்டு எனது தம்பி ஆறுமுகம் என்பவர் சண்டையை மறிக்க வந்தார். அவரை கிருஷ்ணமூர்த்தியின் தம்பி ஏழுமலை எனது சகோதரர் ஆறுமுகத்தை தடியால் மண்டையில் அடித்துவிட்டார். பிறகு எனது அண்ணன் நடராஜனின் மகன் ஜெயகணேஷ் சண்டையை மறிக்க வந்த அவரை எதிரிகள் குப்புசாமியும், மணியும் ஜெயகணேஷை மண்டையில் வெட்டினார்கள். பின்னர் எனது அண்ணி காஞ்சனா சண்டையை மறிக்க வந்த அவரை கையாலும், கத்தியின் பட்டையாலும் இடுப்பில் அடித்தார்கள். பின்னிட்டு போலிசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். எங்களுக்கு ரத்தம் வரவே முதலுதவி சிகிச்சைக்காக பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள். நாங்கள் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனைக்கு சென்ற என் அண்ணனுக்கு முதலுதவி சிகிச்சை அளித்தார்கள். 14.08.2018 அன்று நாங்கள் மருத்துவமனையில் இருந்தோம். பின்பு 15.08.2018 அன்று போலிசார் வந்து எங்களை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : நாங்கள் மருத்துவமனைக்கு சென்ற பொழுது மாலை சுமார் 05.45 மணி இருக்கும். அடிப்பட்ட நாங்கள் நால்வரும் மருத்துவமனைக்கு சென்றோம். நாங்கள் மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். போலிசார் சம்பவயிடத்திற்கு 14.08.2018 அன்று சம்பவத்திற்கு பின்னிட்டு சுமார் அரை மணி நேரம் அல்லது முக்கால் மணி நேரம் கழித்து போலிசார் வந்தார்கள். அங்கு தான் நாங்கள் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. போலிசார் விசாரித்துவிட்டு சென்ற பின்னர் மருத்துவமனையில் வந்து தான் என் அண்ணனிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். போலிசார் மருத்துவமனையில் சம்பவத்தன்றே மாலை 06.30 மணியளவில் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். போலிசார் என்னை 14.08.2018 அன்று சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தார்கள். அதன்பின்னிட்டு என்னை எப்பொழுதும் விசாரிக்கவில்லை. நாங்கள் மருத்துவமனையிலிருந்து இரண்டு, மூன்று நாட்கள் கழித்து டிஸ்சார்ஜ் ஆனோம். அப்பொழுதும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுவான இடம் அல்ல எங்கள் பூர்வீக சொத்தாகும். நான் என் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். போலிசார் என்னை தனியாக விசாரிக்கவில்லை. நான் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் தரப்பில் எங்களுக்கு எதிராக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனக்கு தெரியும். அதில் ஆஜர் எதிரிகள் பிரச்சனைக்குரிய இடம் அவர்களுக்கு சொந்தமானது என்று பரிகாரம் கோரியுள்ளார்கள். அந்த இடம் எதிரிகளுக்கு சொந்தமானது என்றும், அந்த இடம் சம்மந்தமாக எங்களிடம் ஆவணம் எதுவும் இல்லாததால் என் அண்ணன் எதிரிகளின் மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சம்பவ சமயத்தில் நான் சம்பவயிடத்தில் தான் இருந்தேன். ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் நடக்காத சம்பவத்தை நடந்தது போன்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் தரப்பினர் தான் எதிரிகளை அடித்துவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

| | |
|---|---|
| Calendar | ..CC.156/2018 |
| Miscellaneous | .. |
| Preliminary | .. |
| Register | .. |
| Sessions | .. |

| | |
|---|---|
| | PW 3 |
| Deposition of Witness for | Prosecution |
| | Court |

Name : ஆறுமுகம்

Father's Name : சின்னதம்பி

Village : திருவதிகை

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 14.12.2021.

**முதல் விசாரணை :** நான் தற்போது திருவதிகையில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1, அசா.2 ஆகியோரை தெரியும். அவர்கள் எனது அண்ணன் முறை. ஆஜர் எதிரிகளை தெரியும். திருவதிகையில் எங்களுக்கு சொந்தமான பூர்வீட வீடு ஒன்று உள்ளது. கடந்த 14.08.2018 அன்று மேற்படி இடத்தில் பாத்ரூம் கட்டுவதற்காக வேண்டி வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது மணி 03.30 இருக்கும். எதிர்பாராத விதமாக திடீரென்று கிருஷ்ணமூர்த்தி என்பவர் அந்த இடத்திற்கு வந்து அந்த இடத்தில் பிரச்சனை உள்ளது இந்த இடத்தில் வேலை செய்யக்கூடாது என்று சொன்னார். அதற்கு நான் பிரச்சனை என்றால் போலிசில் சொல்லி பிரச்சனையை தீர்த்துக்கொள்ளலாம் அல்லது நாமே பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். தேவிடியா பையா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி என் இடத்தில் காலை வைக்கக்கூடாது, சாரம் கட்டக்கூடாது என்று சாரத்தை பிடித்து உலுக்கி ஆட்டினார். எனது அண்ணன் நடராஜன் சண்டை வேண்டாம் என்று

**சொன்னார். அதற்கு கிருஷ்ணமூர்த்தி என்பவர் அவருக்கு பின் புறத்தில் மறைத்து வைத்திருந்த அறுவாள்மனையை எடுத்து எனது அண்ணன் முதுகில் வெட்டினார். அதன் பிறகு எனது அண்ணன் மற்றொரு சகோதரர் மூர்த்தி என்பவர் சண்டையை விலக்கினார். அப்போது குப்புசாமி என்பவர் எனது அண்ணன் மூர்த்தியின் கையின் ஆள்காட்டி விரலுக்கும், கட்டை விரலுக்கும் நடுவில் வெட்டினார். எனது அண்ணன் நடராஜனின் மகன் ஜெயகணேஷ் என்பவர் சண்டையை விலக்க வந்தார். அவரை குப்புசாமி என்பவரும், மணி என்பவரும் இரும்பு ஆயுதத்தால் ஜெயகணேஷின் மண்டையில் தாக்கினார்கள். அதன் பிறகு குப்புசாமி என்பவர் ஜெயகணேஷின் இடது தோள்பட்டையில் கத்தியால் வெட்டினார். அதன் பிறகு எனது அண்ணன் மனைவி காஞ்சனா சண்டை வேண்டாம் என்று சொன்ன அவரை எதிரிகள் கிருஷ்ணமூர்த்தி, ஏழுமலை, குப்புசாமி ஆகிய மூவரும் சேர்ந்து கத்தியின் பட்டையாலும், கையிலும், முதுகிலும் அடித்தார்கள். அதன் பிறகு என்னை எதிரி ஏழுமலை என்பவர் எனது தலையில் உருட்டு தடியால் என்னை ஒழிந்து போடா தேவிடியா பையா என்று தரக்குறைவான வார்த்தைகளால் பேசி அடித்தார். திடீரென்று போலிசார் அங்கு வந்தனர். அடிப்பட்ட எங்களை போலிசார் பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள். போலிசார் எங்களை முதலுதவிக்கா பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள். மருத்துவமனையில் நாங்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தோம். மறுநாள் காலை என்னை போலிசார் வந்து விசாரித்தார்கள். 14.08.2018 சண்டை நடந்த அன்றே எதிரிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து கொண்டு ஆயுதங்களைக் கையில் வைத்துக்கொண்டு எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள்.**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : நாங்கள் 14.08.2018 அன்று மாலை சுமார் 05.00 மணியளவில் மருத்துவமனைக்கு சென்றோம். எங்களை பக்கதில் இருந்த பாலமுருகன்மற்றும் தினேஷ் ஆகியோர் மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றார்கள். போலிசார் சம்பவயிடத்திற்கு 14.08.2018 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் வந்தார்கள். போலிசார் என்னை மூன்று முறை விசாரித்தார்கள். மூன்று முறை எப்பொழுது என்று சரியாக ஞாபகமில்லை. மேற்படி மூன்று முறையும் போலிசாரிடம் நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத் தான் தெரிவித்துள்ளேனா என்றால் போலிசார் கேட்டதற்கு தகுந்தாற் போல் நான் பதில் சொன்னேன். போலிசார் என்னை சண்டை நடந்தது சம்மந்தமாக விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தபோது நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. போலிசாரிடம் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அதன்பின்னிட்டு நான் காவல் நிலையம் ஜாமின் நிபந்தனை கையெழுத்து போடுவதற்காக சென்றேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அல்ல. எங்களுடைய பூர்வீக சொத்தாகும். அது சம்மந்தமாகத்தான் எதிரிகள் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் உரிமையியல் வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் பிரச்சனைக்குரிய இடம் அவர்களுக்கு சொந்தமானது என்று தெரிவித்துள்ளார்கள். ஐந்து தலைமுறையாக எங்களுக்கும் எதிரிகளுக்கும்

பகைமை இருந்து வருகிறது. எதிரிகளிடம் சொத்து சம்மந்தமான ஆதாரம் உள்ளது என்றும் எங்களிடம் ஆதாரம் எதுவும் இல்லாதால் எதிரிகள் மீது என் அண்ணன் பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.